தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழக எல்லையை வந்தடைந்தது கிருஷ்ணா நீர்



**தமிழக எல்லையான ஜீரோ பாயின்ட்டுக்கு வந்தடைந்த கிருஷ்ணா நதி நீரை மலர் தூவி வரவேற்கும் ஆட்சியர் கொ.வீரராகவராவ் உள்ளிட்ட அதிகாரிகள்.**

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து திறந்து விடப்பட்ட கிருஷ்ணா நதி நீர், தமிழக எல்லையான தாமரைக்குப்பத்தில் உள்ள ஜீரோ பாயின்ட்டை செவ்வாய்க்கிழமை காலை வந்தடைந்தது. தமிழக எல்லைக்கு வந்த கிருஷ்ணா நீரை, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் மலர் தூவி வரவேற்றார்.

கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீரானது, வரதய்யபாளையம், காளஹஸ்தி, சத்தியவேடு, சென்னேரி உள்ளிட்ட பகுதிகள் வழியாக 152 கி.மீ. தூரத்தைக் கடந்து, தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரைக்குப்பம் கிராமத்தில் உள்ள ஜீரோ பாயின்ட்டை வந்தடைந்தது. ஜீரோ பாயின்ட்டிலிருந்து ஊத்துக்கோட்டை, போந்தவாக்கம், மயிலாப்பூர், தேவந்தவாக்கம், நம்பாக்கம், சென்றாயன்பளையம் உள்ளிட்ட

கிராமங்கள் வழியாக 25 கி.மீ கடந்து, பூண்டி ஏரிக்கு புதன்கிழமை அதிகாலை வந்து சேரும். பூண்டி ஏரியில் சேமிக்கப்படும் தண்ணீர், இணைப்புக் கால்வாய் வழியாக செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கும், பூண்டியில் அமைந்துள்ள சென்னை குடிநீரேற்று நிலையத்துக்கும் அனுப்பப்பட்டு, அங்கிருந்து சென்னைக் குடிநீருக்காக அனுப்பப்படுகிறது. கடந்த ஆண்டு கோடைக்காலத்தில், வரலாறு காணாத அளவுக்கு பூண்டி ஏரி வறண்டது. இதனால், பூண்டி ஏரியில் நீர் இருப்பு வெறும் 7.9 கோடி கன அடியாக குறைந்தது. ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்படும் என கிருஷ்ணா திட்ட ஒப்பந்தத்தில் உள்ளது. அதன்படி, நடப்பாண்டில் ஏற்கெனவே இரண்டு முறை தண்ணீர் திறந்துவிடப்பட்டு, முன்னறிவிப்பின்றி திடீரென நிறுத்தப்பட்டது. இதுகுறித்து தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனைத்தொடர்ந்து, ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல், வினாடிக்கு 500 கன அடியாக கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, பின்னர் 1,000 கன அடியாக உயர்த்தப்பட்டது. கடந்த 1-ஆம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர், 5-ஆம் தேதி காலையில் தமிழக எல்லையான ஜீரோ பாயின்ட்டை வந்தடைந்தது. வரவேற்பு நிகழ்ச்சியில் அதிமுக மாவட்டச் செயலாளர் சிறுனியம் பலராமன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், துணைத்தலைவர் பரிமேலழகர், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் அசோகன், கண்காணிப்புப் பொறியாளர் மகேஸ்வரன், செயற்பொறியாளர் சீனிவாசராவ், ஆந்திர மாநில பொதுப்பணித்துறை துணைப்பொறியாளர் சுரேஷ்பாபு உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

## பாபநாசம் அணை நீர்மட்டம் 64 அடியாக உயர்வு

திருநெல்வேலி மாவட்ட அணைகளுக்கு தொடர்ந்து நீர்வரத்து இருந்து வருகிறது. செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணை நீர்மட்டம் 64 அடியாக உயர்ந்தது. கடந்த 5 தினங்களில் பாபநாசம் அணை நீர்மட்டம் 8 அடியும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 9 அடியும், கடனாநதி அணை நீர்மட்டம் 5.50 அடியும், ராமநதி அணை நீர்மட்டம் 3 அடியும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 9.50 அடியும் உயர்ந்துள்ளது. பாசனத்துக்காக பாபநாசம் அணையிலிருந்து 1105 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 55 கனஅடியும், கடனாநதி

அணையிலிருந்து 105 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 40 கனஅடியும், கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார் அணைகளில் இருந்து தலா 10 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. நீர்மட்ட நிலவரம்: செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 63.85 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 78.08 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 55.33 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 65.50 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 66 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 96.50 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 32.48 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 36.10 அடியாகவும் இருந்தது.

**<u>மேட்டூர் அணை நீர்மட்டம் 92 அடியைத் தாண்டியது</u>**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 92 அடியைத் தாண்டியது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 92.68 அடியாக இருந்தது. அணையில் நீர் இருப்பு 55.76 டி.எம்.சியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 34,084 கன அடி நீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து விநாடிக்கு 800 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**<u>சிறு தானிய உணவால் குழந்தைகளின் சத்துக் குறைபாட்டைப் போக்க முடியும்: துணைவேந்தர் கு.ராமசாமி</u>**

சிறுதானிய உணவு மூலமாக குழந்தைகளின் சத்துக் குறைபாட்டைப் போக்க முடியும் என, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார். கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தேசிய சிறுதானிய உற்பத்தி பெருக்கத்திற்கான கலந்தாலோசனை கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. இதில், வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமிபேசியது: வளர்ச்சி என்ற பெயரில் நம் பாரம்பரிய அறிவையும், உணவுப் பழக்கத்தையும் தொலைத்து விட்டோம். காலதாமதமாக அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இழந்தவற்றை மீட்க போராடிக் கொண்டிருக்கிறோம். சிறு தானியங்களில் உடலுக்குத் தேவையான தாதுப் பொருட்கள், வைட்டமின்கள், நார்ச்சத்து அதிகம் உள்ளதால் நலமான

வாழ்வுக்கு பெரிதும் உதவும். அதிகளவு உணவு உற்பத்தியைவிட சத்து மிகுந்த சிறுதானியங்களை உற்பத்தி செய்வதே நாம் நாட்டில் நிலவும் குழந்தைகளின் சத்துக் குறைவு மற்றும் வாழ்வியல் நோய்களைக் கட்டுப்படுத்த சிறந்த வழியாகும் என்றார். மதுரை தானம் அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் எம்.பி.வாசிமலை பேசியது: சிறு தானிய நுகர்வு, சாகுபடி, சிறுதானிய ரகங்களைப் பாதுகாத்தல் மற்றும் அதன் வியாபாரத்தைப் பெருக்குதல் மூலமாகத் தான் சிறுதானிய உற்பத்தியில் நாம் விரும்பும் மறுமலர்ச்சியைக் காண முடியும். சிறுதானியம் தொடர்பான செயல்களில் ஈடுபட்டுள்ள விவசாயி முதல் வியாபாரிகள், ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டால்தான் இது சாத்தியமாகும் என்றார். கனடா மின்னசோட்டா பல்கலைக்கழகப் பேராசிரியர் கிரித் பட்டேல் பேசியது: சிறுதானிய ஆராய்ச்சித் திட்டத்தில் கனடாவைச் சேர்ந்த ஐந்து பல்கலைக்கழகங்களும் ஈடுபட்டுள்ளன. சிறுதானிய உணவின் மகத்துவத்தை உணர்ந்து, தமிழகத்தில் உள்ள அனைவரும் மாதம் ஒரு கிலோ சிறுதானிய உணவை உட்கொள்ள நினைத்தால் இன்றைய சூழலில் அது முடியுமா என்றால் முடியாது. ஒரு நபர் மாதத்திற்கு வெறும் 150 கிராம் உண்ணும் அளவுக்குத் தான் உற்பத்தி இருக்கிறது. எனவே, சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றார். இக் கருத்தரங்கில் 80-க்கும் மேற்பட்ட விவசாயிகள், உணவு உற்பத்தியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வளர்ச்சி நிறுவன பிரதிநிதிகள் மற்றும் தானம் அறக்கட்டளை நிர்வாகிகள் பழனிசாமி, ரமேஷ், பேராசிரியர் மாலதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சோலையாறில் 197 மி.மீ. மழை சோலையாறு அணைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 197 மி.மீ. மழை பெய்தது. பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சோலையாறு 146, பரம்பிக்குளம் 57, லோயர் நீராறு 76, வால்பாறை பி.ஏ.பி. 65, வால்பாறை தாலுகா அலுவலகம் 62, கோவை தெற்கு தாலுகா அலுவலகம் 1.8, வேட்டைக்காரன்புதூர் 7, மாக்கினாம்பட்டி 5, நெகமம் 25, காடம்பாறை 7, தூணக்கடவு 17, பெருவாரிப்

பள்ளம் 20, நல்லூர், நவமலை தலா 1, பொள்ளாச்சி 7, வேளாண் பல்கலைக் கழகம் 2,சின்கோனா97.

**<u>நீலகிரியில் தொடரும் மழை</u>**

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. கூடலூர், பந்தலூர் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக இப் பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பரவலாக பெய்து வருகிறது. கேரள மாநிலத்தையொட்டியுள்ள பகுதிகளிலேயே மழைப்பொழிவு அதிகளவில் இருப்பதால், கூடலூர்,பந்தலூர் பகுதிகளில் அதிகளவாகவும், உதகை, மஞ்சூர் பகுதிகளில் குறைவாகவும் காணப்படுகிறது. தொடர்மழையின் காரணமாக கூடலூர், பந்தலூர் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இவ்விரு பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை அறிவித்து, ஆட்சியர் பி.சங்கர் உத்தரவிட்டிருந்தார். மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் செவ்வாய்க்கிழமை பகலிலும் பரவலாக மழை பெய்துள்ளது. உதகையில் தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக கடும் குளிர் நிலவுகிறது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 272 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் பதிவான மழை விவரம் வருமாறு: (அளவு மி.மீரில்): தேவாலா-78, கூடலூர்-68, கிளன்மார்கன்-32, அப்பர்பவானி-30, நடுவட்டம்-28, அவலாஞ்சி-26, எமரால்டு-4, குன்னூர்-2.2, குந்தா-2 மற்றும் உதகை-1.5 மி.மீ.

**<u>உயிரியல் பூச்சிகொல்லி மருந்து உற்பத்தி: விவசாயிக்கு ரூ.10ஆயிரம் ஊக்கத்தொகை</u>**

உயிரியல் பூச்சிகொல்லி மருந்து உற்பத்தி செய்த விவசாயிக்கு ரூ. 10 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகள்

தொடர்பாக பொதுமக்கள் சார்பில் 325 மனுக்கள், ஆட்சியர் ந.வெங்கடாசலத்திடம் வழங்கப்பட்டன. வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ், சிறுதானிய சாகுபடி ஊக்குவிப்பு நிதியாக, வேடசந்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 2 விவசாயிகளுக்கு தலா ரூ. 10 ஆயிரத்துக்கான காசோலையும், சிறுதானிய சாகுபடி ஊக்குவிப்பு குழு நிதியாக ரூ. 20 ஆயிரத்துக்கான காசோலையும் வழங்கப்பட்டன.

மேலும், தொப்பம்பட்டி பகுதியில் 35 பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு விவசாயிகள் மத்தியில் ஆர்வம் ஏற்படுத்திய தாளையூத்து பகுதியைச் சேர்ந்த விவசாயி சண்முக சுந்தரம் என்பவருக்கு ரூ. 10 ஆயிரமும், இயற்கை உரமான உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி செய்த விவசாயி வீரமணி என்பவருக்கு ரூ. 10 ஆயிரமும், மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் வழங்கினார். கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஏ.எம். நாகேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மு.ச. பாண்டிராஜன், இணை இயக்குநர் (வேளாண்மை) சம்பத்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் காளிபிளவர், கத்தரி விலை உயர்வு ஆக. 5: ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் காளிபிளவர் மற்றும் டிஸ்கோ கத்தரிக்காய் விலை உயர்ந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டம், கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், காய்கறி உற்பத்தி முற்றிலும் குறைந்து, ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி சந்தைக்கு வரத்து குறைந்துவிட்டது. கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து பச்சை மிளகாய், தக்காளி, வெங்காயம் உள்பட பல்வேறு காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன. குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு விவசாயம் செய்வதால், மகசூல் குறைந்துள்ளது. இதனால், காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இதில், வெண்டைக்காய், காளிபிளவர், பச்சை கத்தரிக்காய், டிஸ்கோ கத்தரிக்காய், சுரைக்காய் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் குறைந்த அளவே மகசூல் கிடைத்துள்ளது. இவற்றில், காளிபிளவர் (20 பூ கொண்ட ஒரு பை) ரூ. 340-க்கும், 30 கிலோ கொண்ட ஒரு பை டிஸ்கோ கத்தரிக்காய் ரூ.320-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம், இந்த காய்கறிகள் ரூ. 300-க்கு விற்பனை செய்யப்பட்டது. செவ்வாய்க்கிழமை, சந்தையில் விற்பனையான காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு: செடி முருங்கை ரூ. 18, கரும்பு முருங்கை ரூ. 17, மர முருங்கை ரூ. 15, பொறியல் தட்டப்பயறு ரூ. 22, பாகற்காய் ரூ. 29,

முள்ளங்கி ரூ. 10, பல்லாரி வெங்காயம் ரூ. 30, சின்ன வெங்காயம் ரூ. 40, 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூ. 370, பச்சை கத்தரிக்காய் (30 கிலோ பை) ரூ. 200, வெண்டைக்காய் ரூ. 20, சுரைக்காய் ரூ. 7, சாம்பார் வெள்ளரி ரூ. 4, பூசணி (சுனாமி) ரூ. 10, பூசணி (இளவன்) ரூ. 11, பூசணி (அர்ஜுனா) ரூ. 14.50, பூசணி (நாட்டு ரகம்) ரூ. 14, கொத்தவரை ரூ. 20, மிளகாய் (சம்பா) ரூ. 40, மிளகாய் (உருண்டை) ரூ. 52, மாங்காய் (கல்லாமை) ரூ. 40, மாங்காய் (உருட்டு) ரூ. 28, வாழை நாட்டு ரகம் ரூ. 20, தம்பட்ட அவரை ரூ. 8, சப்போட்டா ரூ. 6, நெல்லிக்காய் ரூ. 32 என விற்பனை செய்யப்பட்டது. திறந்த முறை ஏலத்தில் ரூ 74 ஆயிரத்துக்கு வெங்காயம் விற்பனை செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற திறந்த முறை ஏலத்தில் ரூ. 74 ஆயிரத்துக்கு சின்ன வெங்காயம் விற்பனையானது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 26 விவசாயிகள் தங்களது 72 மூட்டை சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து விற்பனை செய்தனர். கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 20-ம், சராசரியாக ரூ. 15.70 வரை என ரூ. 74 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழக்கிழமை நடைபெறும் திறந்தமுறை ஏலத்தில் சின்ன வெங்காயம் விற்பனை செய்து, விவசாயிகளுக்கு உடனடியாக பணம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிமிருந்து கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. எனவே, செட்டிக்குளம் வணிக வளாகத்தில் நடைபெறும் ஏலத்தில் விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை காலை 11 மணிக்குள் கொண்டுசென்று, 11.30 மணியளவில் நடைபெறும் திறந்த முறை ஏலத்தில் பங்கேற்கலாம்.

**<u>சூரிய சக்தி பம்பு செட் அமைத்து அரசு மானியத்துடன் நுண்ணீர் பாசன வசதி</u>**

குமரி மாவட்டத்தில் சூரிய சக்தி பம்பு செட் அமைத்து நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்த அரசு 80 சதவிகிதம் மானியம் அளிக்கிறது. இது குறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) பொ. பொன்காத்த பெருமாள் திங்கள்கிழமை விடுத்துள்ள செய்திக் குறிப்பு: குமரி மாவட்டத்தில் தென்னை மரங்களுக்கு பெரும்பாலும் விவசாயிகள் வாய்க்கால் அமைத்து நீர் பாய்ச்சி வருகின்றனர். இதனால் பெரும்பாலான நிலத்தடி நீர் வீணாகுவதோடு, அதிக செலவும் ஏற்படுகிறது. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக லாபம் பெற நுண்ணீர் பாசனம் அமைத்தல் மிகவும் அவசியம். நுண்ணீர் பாசனத்தில்

சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் ஆகிய இரு முறைகள் உள்ளன. மின் தட்டுப்பாடு உள்ள நேரங்களிலும், மின் இணைப்பு பெற முடியாத நிலையில் உள்ள விவசாயிகளுக்கு நீர்ப் பாசனம் செய்ய முடியாமல் சிரமப்படுகின்றனர். இந்த பிரச்னைகளைத் தடுக்க சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பது அவசியம். அரசு வேளாண்மைத் துறையின் மூலம் 5 குதிரைத் திறன் கொண்ட ஏ.சி. மோட்டார் பம்பு செட்டுகள்-தானியங்கி சாய்மான வசதியுடன் கூடிய குழாய் பம்பு செட்டுகள் திறந்த கிணறு பம்புசெட்டுகள், தரை மேல் பொருத்தப்படும் பம்பு செட்டுகள் அமைக்க 80 சதவிகிதம் அரசு மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் மொத்த விலை மற்றும் விவசாயிகளின் பங்களிப்பு விவரங்கள்: 5 குதிரைத் திறன் கொண்ட ஏ.சி. சூரிய பம்பு செட்டுகள் அமைப்பு, தானியங்கி சாய்மான வசதிகள், (வடிவமைப்பு, பொருத்துதல், போக்குவரத்து மற்றும் 5 ஆண்டு பராமரிப்பு உள்பட) 5 குதிரைத் திறன் கொண்ட குழாய் பம்பு செட்டுகள் ரூ. 4,39,950. 5 குதிரைத் திறன் கொண்ட திறந்த கிணறு பம்பு செட்டுகள் ரூ. 5,01,512. 5 குதிரைத் திறன் கொண்ட தரை மேல் பொருத்தப்படும் பம்பு செட்டுகள் ரூ. 5,24,650. 5 குதிரைத் திறன் கொண்ட ஏ.சி. சோலார் பி.வி. பம்பு அடிப்படை விலை (குழாய் பம்பு செட்டுகள்) ரூ. 4,19,000. திறந்த கிணறு பம்பு செட்டுகள் ரூ. 4,80,000. தரை மேல் பொருத்தப்படும் பம்பு செட்டுகள் ரூ. 4,99,840. 5 சதவிகிதம் வாட் வரி (குழாய் பம்பு செட்டுக்கு ரூ. 20,950. திறந்த கிணறு பம்பு செட்டுகள் ரூ. 21,512. தரை மேல் பொருத்தப்படும் பம்பு செட்டுகள் ரூ. 24,810. விவசாயிகளின் பங்களிப்பு: விவசாயிகளின் பங்களிப்பு அடிப்படை விலையில் 20 சதவிகிதம் மற்றும் வரி உள்பட்)குழாய் பம்பு செட்டுக்கு ரூ. 1,04,750, திறந்த கிணறு பம்பு செட்டுகள் ரூ.1,17,512, தரை மேல் பொருத்தப்படும் பம்பு செட்டுகள் ரூ. 1.24,778. அடிப்படை விலையில் 80 சதவிகித அரசு மானியம் குழாய் பம்பு செட்டுக்கு ரூ. 3,35,200, திறந்த கிணறு பம்பு செட்டுகள் ரூ. 3,84,000, தரைமேல் பொருத்தப்படும் பம்பு செட்டுகள் ரூ. 3,99,872. நுண்ணீர் பாசன இணைப்பு வைத்துள்ள விவசாயிகள், நேரடியாக சூரிய சக்தி பம்புசெட் அமைக்க விண்ணப்பிக்கலாம். நுண்ணீர் பாசன வசதி இல்லாத விவசாயிகளிடம் தனியாக நுண்ணீர் பாசனத்திற்கான விண்ணப்பம் பெற்று நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கான திட்ட வழிமுறைகளின் அடிப்படையில் நுண்ணீர் பாசன இணைப்பு பெற வேண்டும்.

குறைந்த செலவில் அதிக பயன் வழங்கும் நுண்ணீர் பாசனத்தோடு சூரிய சக்தி பம்பு செட் அமைக்க 80 சதவிகித அரசு மானியம் வழங்குவதுடன் விவசாயிகளுக்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பு ஆகும். இந்த அரசு மானியம் முதலில் வரும் விவசாயிகளுக்கு முன்னிரிமை வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவகங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**




கோவை மாவட்டம், வால்பாறையில் பெய்து வரும் பருவ மழையால், சோலையாறு அணை நிரம்பி வழிகிறது. இதையடுத்து, மதகு வழியாக உபரிநீர் வெளியேற்றப்பட்டது. **அடுத்தபடம்:** மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 90 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து அதிகரிப்பால் அணை கடல்போல் காட்சியளிக்கிறது. **கடைசிபடம்:** ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்பட்ட கிருஷ்ணா நீர் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை 'ஜீரோபாயின்ட்' டை நோக்கி சீறி பாய்ந்து வருகிறது.

**<u>சோலையாறு அணை நிரம்பி வழிகிறது; உபரிநீர் வெளியேற்றம்; விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

வால்பாறை : சோலையாறு அணை முழுகொள்ளவை எட்டி நிரம்பி வழிகிறது. இதனையடுத்து, அணையிலிருந்து உபரி நீர், நேற்று காலை வெளியேற்றப்பட்டது. கோவை மாவட்டம், வால்பாறையில் பெய்து வரும் பருவமழையால், நீர்பிடிப்பு பகுதிகளில், தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதோடு, அணைகளின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. கன மழையினால், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம், நேற்று காலை, 164.52 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு, 7,051 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

அணையிலிருந்து வினாடிக்கு, 6,728 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், சேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கு, வினாடிக்கு, 5,918 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. சோலையாறு அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், அணையின் பாதுகாப்பு கருதி, ஒரு மதகு வழியாக உபரி நீர் நேற்று காலை, 306 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இதனால் விவசாயிகள் பெரு மகிழ்ச்சியடைந்துள்ளனர். மழை அளவு: வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீ.,) வால்பாறை-65, சோலையாறு-146, மேல்நீராறு-197, கீழ்நீராறு-76. அதிகபட்சமாக மேல்நீராறு அணைப்பகுதியில் 19 செ.மீ.,மழை பெய்துள்ளது. பரம்பிக்குளம் நீர்மட்டம் 41 அடியாக உயர்வு: கன மழையினால், 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம், நேற்று காலை 41.59 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் நான்கு அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு, 7,985 கன அடிதண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு, 22 கன அடிதண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பரம்பிக்குளத்தில் 57 மி.மீ.,மழை பெய்துள்ளது.

## பால் விலை ஓராண்டில்14.50 சதவீதம் அதிகரிப்பு

புதுடில்லி:கடந்த ஓராண்டில் பால் விலை, 14.50 சதவீதம் அதிகரித்துள்ளது என, மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் தெரிவித்தார்.கடந்த 2013 மே முதல் 2014ம் ஆண்டு மே மாதம் வரையிலான, ஓராண்டு காலத்தில், சராசரி பால் கொள்-முதல் விலை, 17.68 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம், கூட்டுறவு துறை மூலமான இதன் விற்பனை விலை, 14.50 சதவீதம் உயர்ந்துள்ளது.பால் விலை, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. இதனால், கூட்டுறவு மற்றும் தனியார் பால்பண்ணை நிறுவனங்கள், பால் விலையை, ஆண்டுக்கு, 2 – 3 முறை நிர்ணயம் செய்கின்றன. கடைசியாக, நடப்பாண்டு மே மாதத்தில், பால் மற்றும் பால்

பொருட்கள் விலை உயர்த்தப்பட்டது. இதற்கு, கொள்முதல் விலை அதிகரிப்பே காரணமாக கூறப்பட்டுள்ளது என, தன்வே மேலும் தெரிவித்தார்.

**<u>கடலை பருப்பு வரத்து அதிகரிப்பால் விலை குறைந்தது</u>**



தமிழகத்துக்கு கடலை பருப்பு, கொண்டக்கடலை ஆகியவற்றின் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குவிண்டாலுக்கு, 300 ரூபாய் வரை, சரிவு ஏற்பட்டுள்ளது.மகாராஷ்டிரா:தமிழகத்துக்கு கொண்டக்கடலை, கடலை பருப்பு ஆகியவை மகாராஷ்டிரா, குஜராத், பீகார், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து வருகிறது. கடந்த மாதம் வரை, தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுகளான, சேலம் லீ பஜார், சென்னை, விருதுநகர் ஆகிய இடங்களுக்கு, வாரத்துக்கு, 80 லாரிகளில் மட்டும் கொண்டக்கடலை, கடலை பருப்பு ஆகியவை வந்தன.வட மாநிலங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், வியாபாரிகள் இருப்பு வைத்திருந்த கொண்டக்கடலை, கடலை பருப்பை, அதிக அளவில் விற்பனை செய்து வருகின்றனர். இதனால், தமிழகத்துக்கு கடலை பருப்பு, கொண்டக்கடலை வரத்து அதிகரித்துள்ளது.கடந்த வாரம், வெளி மாநிலங்களில் இருந்து, 120 லாரி வரை, கடலை பருப்பு, கொண்டக்கடலை ஆகியவை வந்தன. வரத்து அதிகரித்ததை அடுத்து, தமிழகத்தில் கடலை பருப்பு, கொண்டக்கடலை ஆகியவற்றை இருப்பு வைத்திருந்த வியாபாரிகள், அவற்றை விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர்.இதன் காரணமாக, மார்க்-

கெட்டுக்கு கடலை பருப்பு வரத்து அதிகரித்து, விலை, குவிண்டாலுக்கு, 300 ரூபாய் வரை குறைந்துள்ளது.சில்லரை விலை:கடந்த வாரம், மொத்த விலையில், கடலை பருப்பு குவிண்டால், முதல் ரகம், 5,100 ரூபாய்க்கு விற்றது, 4,800 ரூபாயா-கவும், இரண்டாம் ரகம் குவிண்டால், 4,800 ரூபாய்க்கு விற்றது, 4,500 ரூபா-யாகவும் சரிந்துள்ளது. இதையடுத்து, சில்லரை விலையில், கிலோவுக்கு, 2 ரூபாய் வரை குறைந்துள்ளது.கடந்த வாரம், முதல் ரகம் கிலோ, 54 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 52 ரூபாயாகவும், இரண்டாம் ரகம் கிலோ, 50 ரூபாய்க்கு விற்றது, 48 ரூபாயாக சரிந்துள்ளது. கொண்டக்கடலை, கடலை பருப்பு வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், கடலை பருப்பு, கொண்டக்கடலை, பொரி கடலை, கடலை மாவு ஆகியவற்றின் விலை குறையும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்

## வண்ண மீன்கள் பொருட்காட்சி

விழுப்புரம்: விழுப்புரத்தில் வசந்தம் கிரியேட்டர்ஸ் சார்பில் வண்ண மீன்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்களின் விற்பனை துவங்கியது. விழுப்புரம் புதிய பஸ் நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சியில் ரெடிமேட் துணிகள், மகளிர் அழகு சாதனம், சமையல், பிளாஸ்டிக், விளையாட்டு பொருட்கள், எலக்ட்ரானிக், புத்தகங்கள் மற்றும் டில்லி அப்பளம், ஊட்டி மிளகாய் பஜ்ஜி, ஐஸ்கிரீம், ஜிகர்தண்டா உணவு வகைகளும் விற்பனை செய்யப் படுகின்றன. சிறுவர்கள் விளையாட ராட்டினங்கள், ரயில், பலூன்கள் அமைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் மாலை 5:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை பொருட்காட்சி நடப்பதாக வசந்தம் கிரியேட்டர்ஸ் மேலாளர்கள் ராஜா, குமார் தெரிவித்தனர்.

## மரவள்ளி பயிருக்கு மேலுரமிட்டு கூடுதல் மகசூல் பெற அழைப்பு

நாமக்கல்: "மரவள்ளி பயிருக்கு மேலுரம் இட்டு, நுண்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கூடுதல் மகசூல் பெறலாம்' என, மோகனூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மோகனூர் வட்டாரத்தில் தற்போது, 300 ஹெக்டர் பரப்பளவில் மரவள்ளி பயிர் சாகுபடி செய்யப்பட்டு, வளர்ச்சி நிலையில் உள்ளது. 90 நாள் வயதுடைய மரவள்ளி பயிருக்கு மேலுரமாக, ஒரு ஏக்கருக்கு, 18 கிலோ தழைச்சத்து தரக்கூடிய, 39 கிலோ யூரியா மற்றும், 48 கிலோ சாம்பல் சத்து தரக்கூடிய, 80 கிலோ பொட்டாஷ் உரத்தையும் இட்டு மண் அணைக்க வேண்டும். மேலும், நுண் சத்து பற்றாக்குறையால் இலைகள் வெளிறிக் காண்பதும், அதை நிவர்த்தி செய்ய, ஒரு லிட்டர் தண்ணீருக்கு பெரஸ்சல்பேட் பத்து கிராம், ஜிங்சல்பேட், ஐந்து கிராம் மற்றும் யூரியா, 20 கிராம் ஆகியவற்றை கலந்து காலை அல்லது மாலை வேலையில் மண்ணில் ஈரம் இருக்கும்போது தெளித்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

## துவரை விவசாயிகளுக்கு மானியம் வேளாண் அதிகாரி தகவல்

நாமக்கல்: "துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது' என, கபிலர்மலை வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில், துவரை விதையை முதலில் பாலித்தீன் பையில் இட்டு, நாற்று விட்டு, பின் எடுத்து நடவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீர்பாசனம் செய்து தனிப்பயிராகி, ஒரு ஹெக்டர் பரப்பில் இம்முறையை கையாண்டு செயல் விளக்கம் அமைக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 7,500 ரூபாய் மதிப்பில் சாகுபடிக்கான அனைத்து இடுபொருட்களும், 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். அதேபோல், துவரை சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தில், ஒரு விவசாயி தான் சொந்த செலவில் அனைத்து தொழில் நுட்பங்களையும் கடைபிடித்து, ஒரு ஹெக்டர் பரப்பில் துவரை சாகுபடி செய்தால், பின் மானியமாக, 7,500 ரூபாய் விவசாயியின் வங்கி கணக்கில் நேரடியாகவோ அல்லது காசோலையாகவோ வழங்கப்படும். இத்தொகை வழங்குவதற்கு முன் உரிய தொழில் நுட்பங்கள் விவசாயியால் செயல்படுத்தி, நல்லமுறையில் திடல் அமைக்கப்பட்டுள்ளதா என ஆய்வு செய்து பின் இத்தொகை வழங்கப்படும். செயல் விளக்கத்துக்கு, 15 ஹெக்டரும், ஊக்கத்தொகைக்கு, 30 ஹெக்டரும் இலக்கு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்காற்ற ஆர்வம் உள்ள விவசாயிகள், வட்டார

வேளாண் விரிவாக்க மையத்தில் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்திட்டத்துக்கான விதைகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் இச்சலுகையை பயன்படுத்தி செயல்விளக்கத் திடல் அமைத்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆர்.சி.எம்.எஸ்.,ல் மஞ்சள் ஏலம் ரூ.60 லட்சத்துக்கு விற்பனை**

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1,435 மூட்டை மஞ்சள், 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் அதன் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். கூட்டுறவு சங்க வளாகத்தில் நடந்த ஏலத்தில், தலா, 65 கிலோ கொண்ட, 1,435 மூட்டைகள் விற்பனைக்கு குவிக்கப்பட்டது. அதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு, அதிக பட்சம், ஒரு மூட்டை, 8,009க்கும், குறைந்த பட்சம், 6,499 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் அதிக பட்சம், ஒரு மூட்டை, 6,899க்கும், குறைந்த பட்சம், 5,809 ரூபாய்கும் விலை போனது. பனங்காலி ரகம் அதிக பட்சம், ஒரு மூட்டை, 14,700க்கும், குறைந்த பட்சம், 10,899 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், 1,435 மூட்டை, 60 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

**எதிர்பார்ப்பு! : பாரம்பரிய விதை நெல் விற்பனைக்கு... முதல் தரத்தை வழங்க வலியுறுத்தல்**

ஈரோடு: பாரம்பரிய நெல் விதைகளை, விற்பனைக்கு கொண்டு வர வேண்டும், என்று விவசாயிகளிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணையில் நீர்மட்டம், 71.78 அடியாக உள்ளது. அணைக்கு, 6,000 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதோடு, நீர் இருப்பும் திருப்திகரமாக உள்ளது. வரும், 15ம் தேதி முதல் எல்.பி.பி., பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்று, எதிர்பார்க்கப்படுகிறது. பொதுப்பணித்துறையினரும், நீர் திறக்கலாம் என்று,

அரசுக்கு பரிந்துரைத்து உள்ளனர். ரசாயன உரம், பூச்சி கொல்லி மருந்துகள், மிக குறைந்த அளவில் பயன்படுத்தும், பாரம்பரிய நெல் விதைகளை, வேளாண் மையங்களில் வைக்க வேண்டும், என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

பா.ஜ., விவசாய அணி மாவட்ட தலைவர் கலைச்செல்வன் கூறியதாவது:

ஐ.ஆர்.20, பவானி, பொன்னி, கோ 43, ஆடுதுறை 38 போன்ற பாரம்பரிய நெல் விதைகளை வேளாண் மையங்களில் விற்பனைக்கு வைக்க வேண்டும். சாணி, குப்பையை இதில் உரமாக பயன்படுத்தலாம். நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறைவாக இருக்கும். மருந்தை குறைந்த அளவு பயன்படுத்தினால் போதும். 140 நாட்கள், நீர் வினியோகிக்க வேண்டும். ஆனால், ஏ.டி.டி., 36, ஏ.எஸ்.டி.,16, ஜெ.,13 ரக விதை நெல்லையே, அரசு சிபாரிசு செய்கிறது. இதில் நோய், பூச்சி தாக்குதல் அதிகமிருக்கும். அதிக மருந்தால், பயிரில் உப்பு தன்மை அதிகரிக்கும். குறைவான நாட்கள் நீர் வினியோகித்தால் போதும். இவற்றில் இருந்து கிடைக்கும் வைக்கோலில், சத்து இருக்காது. இவற்றை உட்கொள்ளும் மாட்டுக்கு, சினை நிற்காது. பால் அதிகம் சுரக்காது. எனவே பாரம்பரிய நெல் விதைகளை வேளாண் மையங்களில் விற்க வேண்டும். விதை நெல் தரத்தின் அடிப்படையில் ஒன்று, இரண்டு என்று பிரித்து விற்கப்படுகிறது. முதல் தரம் கிலோ, 40 ரூபாய்க்கும், இரண்டாம் தரம், 30 ரூபாய்க்கும் விற்கிறது. சான்றளிக்கப்பட்ட விதை, தனியார் விற்பதை தடை செய்ய வேண்டும். இது நம்பதன்மை இல்லாதது. வெளிநாட்டில் இருந்து வருகிறது. முளைப்பு திறன் குறைந்தவை. ஒரு ஏக்கருக்கு, 40 கிலோ விதை நெல் தேவைப்படும். 20 சதவீதம் வீணாக செலவிட வேண்டி இருக்கும். விதை நெல், பூச்சி, பூஞ்சான நோய் தாக்குதல், கலப்படம், மகசூல் குறைவு போன்றவற்றால், விவசாயிகளுக்கு நஷ்டமே ஏற்படும். அரசிடம் மாதிரிகளை காட்டி, சான்று வாங்கி, அதிக விலைக்கு தனியார் வியாபாரிகள் விற்கின்றனர். அரசு விதை பண்ணையில் உருவாகும் விதை நெல், ஏக்கருக்கு, 15 முதல், 20 கிலோ வரை மட்டுமே தேவைப்படும். முளைப்பு திறனுக்கு உத்தரவாதம் உண்டு . மகசூல் அதிகம் கிடைக்கும். ஆனால், இவை இருப்பில் இல்லை என்றும், விதை நெல்லை மீண்டும் அரசுக்கே கொடுக்க வேண்டும் என்று, விவசாயிகள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். எனவே, எல்.பி.பி.,யில் நீர் திறக்க உள்ள நிலையில், தரமான விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

விதை நெல்லை விவசாயிகளிடம் இருந்து, கிலோ, 14.20 ரூபாய்க்கு வாங்கி, 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விதை நெல் விற்பனையில், லாபம் பார்க்க கூடாது, என, கேட்டு கொண்டுள்ளார்.

## செம்மை கரும்பு சாகுபடி குறித்து கல்லூரி மாணவியர் களப்பணி

கோபிசெட்டிபாளையம்: கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக கல்லூரி மாணவியர், செம்மை கருப்பு சாகுபடி குறித்து, கோபி பகுதியில் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஈரோடு மாவட்டம் கோபியில், கோபி வேளாண்மை பல்கலைக்கழக கல்லூரி மாணவியர், கிராம தங்கல் திட்டத்தின் கீழ், மூன்று மாத காலம் தங்கி, செயல் விளக்கப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஊரான் வேளாண் பணி அனுபவ திட்டத்தின் மூலம், கரும்பு, வாழை, மஞ்சள் மற்றும் நெற்பயிர்களில், நோய்கள் தாக்குதல் மற்றும் சாகுபடி முறை குறித்து களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். தவிர, செம்மை நெல் சாகுபடி, செம்மை கரும்பு சாகுபடி, அடர் வாழை சாகுபடி முறை, நுண்ணுயிர் பாசன முறை, மண் மாதிரி எடுத்தல் ஆகியவற்றின் செயல்விளக்கத்தை, விவசாயிகளுக்கு செய்து காண்பித்தனர். மேலும், கோபி அருகே குருமந்தூரில் வடிவேல் என்பவரது விவசாய நிலத்தில், செம்மை கரும்பு சாகுபடி செய்யும் முறை குறித்து, செயல்விளக்கம் காண்பித்தனர். விவசாயி வடிவேல் கூறுகையில், ""செ ம்மை கரும்பு சாகுபடி முறையில், பயிர் செ ய்ய ஏக்கருக்கு, 6,000 கரும்பு நாற்றுகள் தே வைப்படும். நாற்று ஒன்று, 1.50 ரூபாய் செலவாகிறது. இரண்டுக்கு, நான்கு அடி என்ற விகிதத்தில், இடைவெளியில் சாகுபடி செய்யும் போது, 30 சதவீதம் மகசூல் கிடைக்கிற து. தண்ணீரும் மிகக்குறைந்த அளவில் செலவாகும். வேளாண் கல்லூரி மாணவியர்கள், மேற்கொண்டுள்ள முறைகள் மற்றும் சாகுப டி முறைகள் விளக்கம் அளித்ததும், மிகவும் பயனுள்ள தகவலாக இருந்தது," என்றார்.

## தேயிலை தோட்ட தொழிலாளர் வாரிசுகளுக்கு 'கிராஸ் ரூட் லெவல்' கால்பந்து பயிற்சி; தேயிலை வாரியம் புதிய முயற்சி

ஊட்டி : வட கிழக்கு மாநிலங்களை சேர்ந்த தேயிலை தோட்ட தொழிலாளர் குழந்தைகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ளும் வகையில், 'கிராஸ் ரூட் லெவல்' கால்பந்து பயிற்சி திட்டத்தை,தேயிலை வாரியம் அறிவித்துள்ளது. தமிழகம், கேரளா, அசாம் உட்பட்ட மாநிலங்களில் தேயிலை சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. லட்சக்கணக்கான தேயிலை விவசாயிகள், தோட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.தேயிலை தோட்ட தொழிலில் ஈடுபட்டு வந்தவர்களின் பிள்ளைகள் தற்போது கல்வியறிவு பெற துவங்கியுள்ளனர். அவர்களுக்கு, இந்திய தேயிலை வாரியம் சார்பில், கல்விக்கு உதவித் தொகை உட்பட சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து, குன்னூர் தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறியதாவது:அசாம் உட்பட வட கிழக்கு மாநிலங்களில், தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பயங்கரவாதிகளின் பிடியில் சிக்குவதை தவிர்க்கவும், அவர்கள் பொருளாதார நிலையில் உயர்ந்து, தங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ளும் வகையில், 'கிராஸ் ரூட் லெவல்' கால்பந்து பயிற்சி திட்டத்தை ,தேயிலை வாரியம் அறிவித்துள்ளது. அதன்படி, தேயிலை தோட்ட தொழிலாளர்கள் மற்றும் சிறு தேயிலை விவசாயிகளின் பிள்ளைகளில், கால்பந்து விளையாட்டில் ஆர்வமுள்ள, 13 -- 21 வயது வரையுள்ள இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு, பிரபல கால்பந்து கிளப்பான 'ஈஸ்ட் பெங்கால் கிளப்' சார்பில், சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கால்பந்தில் 'ஜொலிக்கும்' இளைஞர்களுக்கு ஊக்கத் தொகை போன்றவை வழங்கப்படுகிறது. பிரபல கால்பந்து கிளப்பில் பயிற்சி பெற்றவர்கள் என்ற நிலைக்கு இளைஞர்கள் வரும் போது, அவர்களுக்கு பல்வேறு தனியார், பொதுத்துறை நிறுவனங்களில், வேலை வாய்ப்பும் கிடைக்கும். இவ்வாறு அம்பலவாணன் கூறினார்.

## புத்தூர் வயல் விவசாயிகளுக்கு புதிய பயிற்சி முறைகள்

கூடலூர் : புத்தூர்வயல் விவசாயிகளுக்கு "பஞ்சகவ்யா மற்றும் தசகவ்யா' தயாரிக்கும் முறைகள் குறித்து பயிற்சிஅளிக்கப்பட்டது. கூடலூர் தோட்டக்கலை துறை, வேளாண்மை தொழிற்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், புத்தூர்வயலில் "பஞ்கவ்யா மற்றும் தசகவ்யா' தயாரிக்கும் முறைகள் குறித்த புதிய பயிற்சி முகாம் நடந்தது. திட்ட தொழிற்நுட்ப ஆராய்ச்சியாளர் சந்தியா வரவேற்றார். கூடலூர் தோட்டகலை துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி தலைமை வகித்தார். வீரிய ஒட்டுரக நெல் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் முனைவர் மனோன்மணி "நெல் ரகங்கள் அற்றுக்கு ஏற்படும் நோய்கள், நோய் அறிகுறிகள் அதனை கட்டுப்படுத்தும் முறைகள்' குறித்து விளக்கினார். தோட்டக்கலை அலுவலர் ஜெயலட்சமி மற்றும் திட்டத்தின் தொழில்நுட்ப மேலாளர் யமுனாபிரியா "பஞ்சகவ்யா, தசகவ்யா குறித்து விளக்கி அதனை தயாரிக்கும் முறைகள்' குறித்து செயல் விளக்க பயிற்சி அளித்தனர். பானுப்பிரியா நன்றி கூறினார்.

## <u>விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்</u>

ஊட்டி : நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நீலகிரி மாவட்டத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும் 22ம் தேதி காலை 10:30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமையில் நடத்தப்பட உள்ளது. நீலகிரி மாவட்ட விவசாயிகள், விவசாயம் சம்மந்தப்பட்ட குறைகள் இருப்பின், பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து விவசாயம் தொடர்பான குறைகள் இருப்பின் அதை மனுவாக வழங்கலாம். தவிர, விவசாயம் சம்மந்தப்பட்ட நீர் பாசனம், இடுபொருட்கள் குறித்த கோரிக்கைகளை மட்டும் கூற வேண்டும். மனுக்களை, "தோட்டக்கலை இணை இயக்குனர், தபால் பெட்டி எண். 72, ஊட்டி 1' என்ற முகவரிக்கு தபாலிலோ, நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம். இவ்வாறு, மணி கூறியுள்ளார்.

## லாரி பேட்டையில் காய்கறி மார்க்கெட்; முதல்கட்ட பணிகள் துவங்கியது

திண்டுக்கல் : திண்டுக்கல் காந்தி காய்கறி மார்க்கெட்டை இடம் மாற்றுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள லாரி பேட்டையில், முதற்கட்டபணியாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. போக்குவரத்து நெரிசல் மற்றும் இட நெருக்கடி காரணமாக திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டை இடம் மாற்றம் செய்ய மாநகராட்சி முடிவு செய்திருந்தது. இதற்கு வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இருப்பினும் தங்கள் முடிவில் உறுதியாக இருந்த மாநகராட்சியினர் தற்போது அதற்கான முதற்கட்ட பணியை துவக்கியுள்ளனர்.இரண்டரை ஏக்கர் பரப்பளவுள்ள லாரிபேட்டையில் லயன்ஸ்தெரு வழியாக சென்று வர ஒரு வழியும், பழநி ரோடு வழியாக சென்று வர மற்றொரு வழியும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. மார்க்கெட் முழுவதும் மேற்கூரை அமைக்கப்பட்டு காய்கறி வியாபாரிகளுக்கு தனித்தனியாக தற்காலிக கடைகள் கட்டிகொடுக்கப்பட உள்ளது.மேயர் மருதராஜ் கூறுகையில்,""லாரி பேட்டையில் காந்தி மார்க்கெட்டை இடம் மாற்றுவதற்கான முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன. புதிய மார்க்கெட்டின் பிரதான வழி பழநி ரோட்டிலும், பின்பக்க வழி லயன்ஸ் தெரு வழியாகவும் அமைக்கப்படும். தற்போது சுற்றுச்சுவர் கட்ட முடிவு செய்துள்ளோம்," என்றார்.

## திருந்திய நெல் சாகுபடி; செயல்முறை விளக்கம்

தேனி : குள்ளப்புரம் விவசாய தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் காயத்ரி, ஹரிதா, நந்தினி, சண்முகப்பிரியா, சந்தியா, விஜயலட்சுமி, பத்மபிரியா, ரூபிகாகிளாஸ், வித்யாதேவி ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தில் தேனி பகுதியில் தங்கி, விவசாயிகளை சந்தித்து, தொழில்நுட்பங்களை வழங்கி வருகின்றனர். உப்பார்பட்டியில் விவசாயி சிவராஜ் நிலத்தில் அசோஸ்பைரில்லம் கொண்டு, நெல் நாற்று நேர்த்தி செய்வதும், மற்றும் திருந்திய நெல் சாகுபடி முறை பற்றி செயல் விளக்கத்துடன் விளக்கினர். நாற்று நேர்த்தியின் முக்கியத்துவம், திருந்திய

நெல் சாகுபடியின் முக்கியத்துவம், அதன் மூலம் கிடைக்கும் மகசூல் பற்றி தெளிவாக விளக்கினர்.

## <u>தமிழ்நாடு விவசாயிகள் சங்க 24 வது மாவட்ட மாநாடு</u>

பரமக்குடி : பரமக்குடியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 24 வது ராமநாதபுரம் மாவட்ட மாநாடு நடந்தது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் ஜீவா தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் மணி, மாவட்ட பொருளாளர் குருசாமி முன்னிலை வகித்தனர். மாவட்ட குழு உறுப்பினர் வேலு மாநாட்டு கொடியேற்றினார். தாலுகா தலைவர் கார்த்திகைராஜ் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார். மாநில தலைவர் முத்துராமலிங்கம் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் ராஜன், நகர் செயலாளர் பெருமாள், ஏ.ஐ.டி.யு.சி., சங்க மாநில தலைவர் ராதா, வைகை பாசன விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மதுரைவீரன், ஒன்றியச் செயலாளர்கள் பேசினர். கூட்டத்தில், ராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். மூன்று வருடமாக வழங்கப்படாமல் உள்ள மிளகாய் காப்பீடு நிதியை உடனடியாக வழங்க வேண்டும். மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினையை கருத்தில் கொண்டு, கிராமங்களுக்கு லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க வேண்டும். உடைந்து வீணாகும் காவிரி குழாயை சீர் செய்து குடிநீர் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## <u>நெல்லையில் தெ.மே.,பருவ மழை; அணைகளில் நீர்மட்டம் உயர்வு</u>

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவரும் தென்மேற்கு பருவ மழையினால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. இருப்பினும் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி, அடவிநயினார் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட அணைக்கட்டுகள் உள்ளன. ஆண்டுதோறும் ஜூன் துவக்கத்தில் பெய்யும்

தென்மேற்கு பருவமழையினால் அணைக்கட்டுகள் நிரம்பிவிடும். கார் பருவ நெல்சாகுபடிக்கு உகந்ததாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டு மழை பொய்த்துவிட்டது. இதனால் அணைகளின் நீர்மட்டம் குறைவாக உள்ளது. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும் கார் நெல் சாகுபடி இந்த முறை முழுமையாக நடக்கவில்லை. இருப்பினும் தாமதமாக ஆகஸ்ட் துவக்கத்தில் நெல்லை மாவட்டத்தின் மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்துவருகிறது. இதனால் 143 அடி மொத்த உயரம் கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 64 அடியாக உயர்ந்தது. கடந்த ஐந்து நாட்களில் பெய்துள்ள மழையில் எட்டு அடி உயர்ந்துள்ளது. இதே போல 153 அடி உயரம் கொண்ட சேர்வலாறு அணையில் 78.08 அடியாக தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. கடனாநதியின் நீர்மட்டம் கடந்த ஐந்துதினங்களில் 5.50 அடி உயர்ந்து, தற்போது 63.50 அடியாக உள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடும் போது நெல்லை மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் 44 சதவீத அளவு குறைவாக உள்ளது. தற்போதைய மழையினால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துவருவது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## குமரி மாவட்ட அணைகளில் நீர்மட்டம்

பேச்சிப்பாறை11.00(48.00)

பெருஞ்சாணி40.95(77.00)

சிற்றாறு-16.00(18.00)

சிற்றாறு-26.10(18.00

பொய்கை1.30(42.64)

மாம்பழத்தணை45.28(54.12)

மாவட்டத்தில் தற்போது கிடைக்க வேண்டிய தென்மேற்கு பருவமழை சரியாக கிடைக்கவில்லை. இதனால் கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்த ஆண்டு நேர் பாதி அளவு கூட நீர்இருப்பு இல்லை. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உணவு, பாலில் கலப்படம் செய்தால் கடும் நடவடிக்கை

உணவு, பால் கலப்படங்களை தடுக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் சமீபத்தில் ஆலோசனை தெரிவித்திருந்தது. அதில், 'உணவில் கலப்படம் செய்வது அதிகரித்து வருகிறது. பொதுமக்களின் நலன் கருதி, உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு சட்டத்தில் மத்திய அரசு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான், இதுபோன்ற குற்றங்களை தடுக்க முடியும்' என நீதிபதிகள் கூறியிருந்தனர். இது தொடர்பாக நேற்று மாநிலங்களவையில் பேசிய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன், 'உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி, உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு சட்டத்தில் மத்திய அரசு சில திருத்தங்களை மேற்கொள்ள உள்ளது. அந்த சட்ட திருத்த மசோதாவில், உணவு மற்றும் பாலில் கலப்படம் செய்வது கடும் குற்றமாக்கப்படும். இதற்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும். மக்களின் அன்றாட தேவைகளில் ஒன்றான பாலில் கலப்படம் செய்வதால், பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதுபோன்ற குற்றங்களை தடுக்க சட்டதிருத்த மசோதா அவசியமாகிறது' என்றார். பால் கலப்பட குற்றத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கும் அளவுக்கு சட்டம் கடுமையாக்கப்பட வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

<u>தமிழகத்தில் லேசான மழை</u>




சென்னை: கோவை, நீலகிரி மாவட்டத்தில் இன்று கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தெலங்கானா, கேரளா, தெற்கு கர்நாடகா பகுதிகளில் தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரம் அடைந்துள்ளது. இதனால் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக தமிழகத்தில் நேற்று சின்னகல்லாரில் 200 மி.மீ மழை பெய்துள்ளது. வால்பாறை, தேவாலா 80 மி.மீ, கூடலூர் 70 மி.மீ, நடுவட்டம் 30 மி.மீ, திருமயம், ஓமலூர்,பெரியாறு, மங்கலபுரம், சேலம் 10 மி.மீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், இந்தியாவின் மத்திய பகுதியில் குறைந்த காற்றழுத்தம் நிலை கொண்டுள்ளது. அத்துடன் வங்கக் கடலின் வட க்கு பகுதியில் மழை மேகம் சூழ்ந்துள்ளது. அரபிக் கடல் பகுதியிலும் மழை மேகம் சூழ்ந்துள்ளது. இதனால் தென் மேற்கு பருவமழை மீண்டும் தீவிரம் அடையத் தொடங்கியுள் ளது. தெலங்கானா, கேரளா, தெற்கு கர்நாடகா பகுதிகளில் கனமழை பெய்யும் சூழல்

அதிகரித்துள்ளது. இதனால் தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் இன்றும், நாளையும் கனமழை பெய்யும். தமிழகத்தின் மற்ற இடங்களில் லேசான மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. சென்னையில் பொது வாக மேகமூட்டம் காணப் படும். மாலை நேரங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**<u>உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் : நமது உரிமைகளை விட்டுத்தர மாட்டோம்</u>**

புதுடெல்லி: உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா தயாராக இருந்தாலும், நமது உரிமைகளை விட்டுத்தர மாட்டோம் என மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். இந்த பிரச்னை குறித்து மக்களவையில் நேற்று அறிக்கையை தாக்கல் செய்தநிர்மலா சீதாராமன் கூறியுள்ளதாவது: இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளை அரசு பாதுகாக்கும். அனைவருக்கும் தட்டுப் பாடு இல்லாமல் உணவு கிடைப்பது உறுதி செய்யப்படும். இந்திய விவசாயி களுக்கும், நுகர்வோருக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எதையும் அரசு ஏற்காது. உணவு மானியங்களைக் கட்டுப்படுத்தும், உணவுப் பொருட்களை சேமித்து வைப்பதில் கட்டுப்பாடு விதிக்கும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தை ஏற்க முடியாது. இதில் இந்தியா உறுதியாக உள்ளது. வளரும் நாடுகளை, குறிப்பாக நமது மக்களை பாதிக்கக் கூடிய இந்த அம்சங்களில் திருத்தம் செய்ய வேண்டும் என்று உறுதிபட கூறியுள்ளோம். வளரும் நாடுகளின் நிர்ப்பந்தத்துக்கு அடிப்பணிய மாட்டோம். வளரும் நாடுகளின் இந்த பிரச்னையை, நிலைமையை உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்¢. மற்ற வளரும் நாடுகளுடன் இது தொடர்பாக பேசி வருகிறோம். உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதே நேரத்தில் நமது மக்களின் உரிமையை, அதற்கு விலையாக கொடுக்க மாட்டோம். நமது கோரிக்கைகளை ஏற்று, திருத்தி அமைக்கப்படும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா தயாராக உள்ளது என்றார் நிர்மலா சீதாராமன்.

## விளைச்சல் குறைந்ததால் சாமந்தி விலை அதிகரிப்புகிலோ கி350க்கு விற்பனை

தேன்கனிக்கோட்டை, : தேன்கனிக்கோட்டை பகுதியில் மழை பொய்த்ததால் சாமந்தி விளைச்சல் குறைந்தது, கிலோ 350ஆக உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, தளி பகுதியில் சாமந்தி, ரோஜா, செண்டுமல்லி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தேன்கனிக்கோட்டை சுற்று வட்டார பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கரில் சாமந்தி பயிர் செய்யப்பட்டுள்ளது. போதிய மழையின்மையால் பூ வெடிக்காமல் உள்ளதால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. வரும் 8ம் தேதி வரலட்சுமி பண்டிகை வர உள்ளதால், தற்போது சாமந்தி பூகிலோ கி350 வரை விற்பனையாகிறது. ஏக்கருக்கு இரண்டு டன் பூ கிடைக்கும் இடத்தில் போதிய மழையில்லாததால் 50கிலோ பூ மட்டும் அறுவடை செய்யப் படுகிறது. இதனால் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். தொடர்ந்து, பண்டிகைகள் வருவதால் பூக்களின் விலை மேலும் உயரும் என கூறப்படுகிறது.

## முருங்கைக்கீரை விற்பனை அமோகம்ஒரு கட்டு ரூ5 முதல் ரூ10க்கு விற்பனை

சேலம், : ஆடிப்பெருவிழாவில் இன்று பெரும்பாலான வீடுகளில் அம்மனுக்கு படையலிடுவார்கள். இதையொட்டி சேலம் கடைவீதியில் முருங்கைக்கீரை விற்பனை அமோகமாக இருந்தது. சேலத்தில் ஆடிப்பெருவிழா களைக்கட்டியுள்ளது. இவ்விழாவையொட்டி மாநகரத்தில் உள்ள பெரும்பாலான வீடுகளில் கொலுக்கட்டை, மாவிளக்கு, பருப்பு, கீரை பொறியல் செய்து அம்மனுக்கு படையலிடுவது வழக்கம். இதையொட்டி சேலம் கடைவீதி, பட்டைகோயில், ஆனந்தா திருமணி முத்தாறு ஓரமுள்ள காய்கறிகளில் நூற்றுக்கணக்கில் வியாபாரிகள் முருங்கைக்கீரை கட்டை குவித்து வைத்து இருந்தனர். இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது: சேலம் சுற்று வட்டார பகுதியில் ஏராளமான முருங்கை மரங்கள் உள்ளன. தற்போது முருங்கை மரங்களில் முருங்கைக்கீரை அதிகளவில் முளைத்துள்ளது. ஆடிப்பண்டிகையையொட்டி பெரும்பாலான வீடுகளில் கீரை சமைத்து அம்மனை வழிப்படுவார்கள். இதையொட்டி முருங்கை மரங்களில் இருந்து முருங்கைக்கீரை

பறித்து விற்பனைக்காக குவித்துள்ளோம். முருங்கைக்கீரை அதிகம் பேர் வாங்கிச்சென்றனர். ஒரு கட்டு கீரை ரூ5 மற்றும் ரூ10 என விற்பனை செய்யப்பட்டது,'' என்றனர்.

**<u>ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.3கோடியே 20லட்சம் ஒதுக்கீடு</u>**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் அரசு சார்பில் விவசாய நிலங்களில் ஆழ்துளை கிணறு அமைக்க 150 விவசாய குழுக்களுக்கு ரூ.3கோடியே 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிட்ட அறிக்கையில், 'சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆழ்துளை கிணறு திட்டத்திற்கு ரூ.3கோடியே 20லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அதிகபட்சம் 25 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலங்களை 10 முதல் 15 விவசாயிகள் இணைந்து கூட்டு பொறுப்புக்குழுவாக இணைந்து செயல்பட சம்மதிக்க வேண்டும். இத்திட்டம் 2014&15ம் நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு ஆழ்துளை கிணறு 50 சதவீத மானியத்தில் அமைத்து தரப்பட உள்ளது. ஆழ்துளை கிணற்றில் நீர் மூழ்கி மோட்டார் பொருத்துதல், ஒவ்வொரு குழு உறுப்பினரின் நிலத்திற்கு பாசன நீரை சேதாரமின்றி கொண்டு செல்ல பிவிசி குழாய் பொருத்துதல் உள்ளிட்ட பணிகள் செய்யப்படும். ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக ரூ.3லட்சத்து 50ஆயிரம் மானியமாக செலவிடப்படும். குழுவினர் தங்களது பங்களிப்பாக 50 சதவீதம் செலுத்த வேண்டும். ஆழ்துளை கிணறு அமைக்க குழு உறுப்பினர்களின் நிலங்களில் ஆய்வு செய்யப்பட்டு இடம் தேர்வு செய்யப்படும். இடத்தின் உரிமையாளரான விவசாயி மற்ற உறுப்பினர் அனைவருக்கும் பாசன நீரை பங்கிட்டு வழங்க வேண்டும். இத்திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிட விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விருப்பமுள்ள விவசாய குழுக்கள் வேளாண் பொறியியல் உதவி செயற்பொறியாளர், சிவகங்கை, உதவி செயற்பொறியாளர், காரைக்குடி அலுவலகங்களில் நேரடியாக மனு அளிக்க வேண்டும். கூடுதல் விபரம் அறிய சிவகங்கை வருவாய் கோட்டத்திற்கு

04575&240288, 240213 என்ற தொலைபேசி எண்களிலும், தேவகோட்டை வருவாய் கோட்டத்திற்கு 9443115220என்ற செல் எண்ணிலும் தொடர்பு கொள்ளளலாம்.

## விவசாயிகளுக்கு மானியம் வழங்க தேயிலை ஏஜன்ட்கள் வலியுறுத்தல்

கோத்தகிரி, : நீலகிரி தேயிலை ஏஜன்ட்கள் நலச்சங்க கூட்டம் கோத்தகிரியில் நடைபெற்றது. சங்க பொருளாளர் நடராஜ் வரவேற்றார். தலைவர் சிலாக்கியம் துரை தலைமை வகித்தார். கூட்டத்தில் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். துணை தலைவராக ராஜூ, செயலாளராக சங்கர், துணை செயலாளராக கண்ணன், இணை செயலாளராக தேவராஜ், நிர்வாக குழு உறுப்பினர்களாக ராஜூ, கண்ணப்பன், குமார் உள்ளிட்ட பலர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில், தேயிலை மகசூல் தற்போது அதிக விளைச்சல் காரணமாகவும், மேலும் தொழிற்சாலைகளில் வாரத்தில் 3 நாட்கள் கொள்முதல் செய்த காரணத்தினால் பெரும்பாலான சிறு தேயிலை விவசாயிகள் அறுவடைக்கு தயாரான பச்சை தேயிலையை பறிக்க முடியாமல் அவதிக்குள்ளாகினர். எனவே சிறு, குறு விவசாயிகளின் நலன் கருதி தரத்தினை காரணம் காட்டாமல் செடிகளில் அறுவடைக்கு தயாராக உள்ள பசுந் தேயிலைகளை தொழிற்சாலைகளில் கொள்முதல் செய்து உதவ தேயிலை வாரியம் மற்றும் தொழிற்சாலைகளை கேட்டு கொள்வது, கடந்த சில வாரங்களாக தேயிலையின் வார விலை ரூ 9 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தேயிலை பறிக்க மட்டும் விவசாயிகளுககு கிலோ ரூ. 7 வரை செலவாகிறது. எனவே விவாசாயிகளின் நலன் கருதி மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும், நடப்பு அறுவடை முடிந்த பின் இனி வரும் காலங்களில் தரமான தேயிலை கொடுத்து அதிக விலை பெற அனைத்து விவசாயிகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் துணை செயலாளர் நன்றி கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>வேளாண் வணிகத்துறையின் மூலம் 60 விளைபொருள் குழுக்கள் அமைக்க இலக்கு அரியலூர் கலெக்டர் தகவல்</u>



அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் நடப்பாண்டில் 60 விளைபொருள் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் சரவணவேல் ராஜ் தெரிவித்துள்ளார். கலெக்டர் பார்வையிட்டார் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், இடையார் கிராமத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் விளை பொருள் குழுக்களுக்கு தானிய கலன் அமைக்கப்படும் இடத் தினை கலெக்டர் சரவண வேல்ராஜ் பார்வை யிட்டார். அப்போது அவர் கூறியதாவது:- குழு அமைப்பு பயிர் சாகுபடி பருவத்தில் ஒரு குறிப்பிட்ட பயிரை பயிர் செய்யக்கூடிய 15 முதல் 20 விவசாயிகளை தேர்வு செய்து குழு அமைக்கப்படுகிறது. இக்குழு விவசாயிகளுக்கு அறுவடை மற்றும் அறு

வடைக்குபின்பு, அறுவடை பின்செய் நேர்த்தி சம்பந்தமாக தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் விளைவாக விவசாயிகள் தங்களது விளை பொருள்களை தரம் பிரித்து, ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக விற்பனை செய்வதால் விளை பொரு ளுக்கு கூடுதல் விலையும், கூடுதல் லாபமும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் 60 குழுக்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் நடப்பு ஆண்டில் 60 விளைபொருள்கள் குழுக்கள் அமைக்க இலக்கு பெறப்பட்டு இதுவரை 15 விளை பொருள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் ஜெயங்ªகொண்டம் வட்டாரம், இடையார் கிராமத்தில் நிலக் கடலை சாகுபடி செய்து உள்ள 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு விளைபொருள் குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் நிலக்கடலை பயிர் 15-20 நாள் வளர்ச்சி நிலையில் உள்ளது. தொழில்நுட்பங்கள் நிலக்கடலை பயிர் முதிர்ச்சி அடையும் நிலையில் விவசாயி களுக்கு அறுவடை பின் தொழில் நுட்பங்கள் சம்பந்த மாக பயிற்சி அளிக்கப்படும். சரியான முதிர்ச்சி நிலையில் அறுவடை செய்தல், நிலக் கடலை காய்களை நன்குகாய வைத்து, கல், மண், தூசிகளை நீக்கி சுத்தம் செய்தல், தரம் பிரித்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் செயல் படுத்தப்படும். தரம் பிரிக் கப்பட்ட விளைபொருளை ஒன்று சேர்த்து விற்பனை விலையை விட 5 முதல் 10 சதவீதம் வரை கூடுதல் விலை கிடைக்கும். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார். பின்னர் வாரணவாசி மல்லூர் கிராமத்தில் லேசர் மூலம் நிலம் சமபடுத்துதல் எந்திரத்தினை கலெக்டர் சரவணவேல்ராஜ்பார்வையிட்டார். செட்டிகுளத்தில் சின்னவெங்காய ஏலம் பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் ஓவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடத்தப் பட்டு சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது.இதன் மூலம் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள், வியாபாரி களிடமிருந்தும்கட்டணம்எதுவும்வசூலிக்கப்படுவதில்லை. இந்நிலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஏலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 26 விவசாயிகள் தங்களது 72 மூட்டை (4,718 கிலோ) சின்ன வெங்காயத்தை

கொண்டு வந்து விற்பனை செய்தனர். கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.20.00 சராசரியாக ரூ15.70 வரை விலை கிடைத்தது. இதன்மூலம் ரூ.74 ஆயிரத்திற்கு விற்பனை நடைபெற்றது.

**<u>வனப்பகுதியில் பலத்த மழை எதிரொலி: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**

**<u>அதிகபட்சமாக அப்பர் நீராறில் 197 மி.மீ. மழை பதிவானது</u>**



வனப்பகுதியில் பெய்து வரும் பலத்த மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதிகபட்சமாக அப்பர் நீராறில் 197 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. பரம்பிக்குளம் அணை பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி.) முக்கிய மான அணையான பரம்பிக் குளம் அணை 72 அடி கொள் ளளவு கொண்டது. கேரளாவில் அமைந்துள்ள இந்த அணைக்கு சோலையார் அணையில் இருந்து திறக்கப் படும் தண்ணீர் மூலம் அணை நிரம்புகிறது. இதை தவிர வனப்பகுதியில் உருவா கும் நீரோடைகளில் இருந்தும் தண்ணீர் வருகிறது. இந்த அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் சர்க்கார்பதியில் மின் உற்பத்தி செய்த பின், 49 கிலோ மீட்டர் தூரம் கொண்ட காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல் லப்படுகிறது. இதை தவிர குடிநீர் தேவைக்காக ஆழி யாறு அணைக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. பலத்த மழை இந்த நிலையில் கடந்த மாதம் 1–ந்தேதி பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 15.23 அடியாக இருந்தது. இந்த நிலையில் வனப்பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிர மாக பெய்து

வருவதாலும், சோலையார் அணை அதன் முழுகொள்ளளவை எட்டிய தால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. பரம்பிக்குளம் அணைக்கு வினாடிக்கு 7985 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி 41.59 அடியாக உயர்ந்து உள்ளது. ஆழியாறு அணை இதேபோன்று பழைய ஆயக் கட்டு, புதிய ஆயக்கட்டு மற்றும் லட்சக்கணக்கான மக் களின் குடிநீர் தாகத்தை தீர்த்து வரும் ஆழியாறு அணைக்கும் நீர்வரத்து அதி கரித்து உள்ளது. குரங்கு நீர் வீழ்ச்சி மற்றும் வனப் பகுதியில் பெய்யும் மழை மூலம் அணைக்கு வினாடிக்கு 2166 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தற்போது அணையின் நீர்மட்டம் 97.70 அடியாக உயர்ந்து உள்ளது. பி.ஏ.பி. அணைகளில் சோலையார் அணை நிரம்பி விட்டது. அதை தொடர்ந்து பரம்பிக்குளம், ஆழியாறு அணைகள் நிரம்பி வருவதால் பி.ஏ.பி. பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு விவரம் வருமாறு:–

சோலையார்– 146 மி.மீ., பரம் பிக்குளம்– 57 மி.மீ., அப்பர் நீரார்– 197 மி.மீ., லோயர் நீரார்– 76 மி.மீ., வால்பாறை– 65 மி.மீ., வேட்டைக்காரன் புதூர்– 7 மி.மீ., பொள்ளாச்சி – 5 மி.மீ., மணக்கடவு– 13.4 மி.மீ., காடம்பாறை– 7 மி.மீ., நெகமம்– 27 மி.மீ., தூணக் கடவு– 17 மி.மீ., பெருவாரிப் பள்ளம்–20மி.மீ., நல்லாறு – 1 மி.மீ., நவமலை– 1 மி.மீ.

**<u>தமிழ் மண்ணிலும் விளையும் திகட்டாத பேரீச்சம்பழம் சாதித்துக்காட்டிய தந்தை–மகன்</u>**



இயற்கையோடு நடத்தும் போராட்டத்தின் மறுபெயர் விவசாயம் என்ற நிலைமை தற்போது ஏற்பட்டு உள்ளது. ‘இந்த மண்ணில், இந்த பயிர் சாகுபடி செய்ய முடியாது. நீங்கள் நினைப்பதை கைவிடுங்கள். இல்லையேல் நஷ்டம் வரும்’ என விவசாயம் சார்ந்த துறை அதிகாரிகள் கைவிரித்த நிலையிலும், தனி முயற்சியுடன் பேரீட்சை பயிர் செய்து வெற்றியும் பெற்று இருக்கிறார் சுந்தர்ராஜ் (வயது 66). தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே உள்ள சீலையம்பட்டியை சேர்ந்த இவர் வங்கி அதிகாரியாக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். பாலை வனத்தில் விளையும் பேரீட்சை பழத்தை, இயற்கை அன்னையின் அரவணைப்பில் உள்ள சீலையம்பட்டியில் சாகுபடி செய்து அதில் வெற்றியும் பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கிறார் இந்த சுந்தர்ராஜ். சீலையம்பட்டி ஊரின் நுழைவுப் பகுதியில் சாலையோரம் காட்சி அளிக்கிறது இவருடைய பேரீட்சை பழத்தோட்டம். இந்த பேரீட்சை பழத்தோட்டத்திற்கு அவர் தனது மனைவி ஜோதியின் பெயரை சூட்டியுள்ளார். பி.எஸ்சி. கணிதம் படித்துவிட்டு வங்கி அதிகாரியாக பணியாற்றிய இவருடைய பெற்றோர் விவசாயிகள். ஆனால் படிப்பு, பணி, பிள்ளைகள் படிப்பு என எதிலும் விவசாயத்தின் வாசம் இல்லாமல் போன நிலையில் மீண்டும் தாய் பூமியில் தன்னிகரற்ற விவசாயத்தில் தலை நிமிர்ந்து நிற்கிறார். அவருக்கு பக்கபலமாய் அவருடைய மகன் சுரேஷ்குமாரும் பகுதிநேர விவசாயியாக உருவெடுத்து உள்ளார். பணி ஓய்வுக்கு பிறகு விவசாயத்தில் கால் பதித்த பயணம் குறித்து சுந்தர்ராஜ் கூறுகையில்:–

<u>உங்கள் குடும்பத்தை பற்றி…</u>

என் மனைவி பெயர் ஜோதி. எங்களுக்கு சீலையம்பட்டியில் அரசு உதவி பெறும் பள்ளி உள்ளது. அந்த பள்ளியில் அவர் ஆசிரியராக பணியாற்றி ஜோதி ஓய்வு பெற்றார். எனக்கு சுரேஷ்குமார் என்ற மகனும், உமா, ஹேமா என்ற மகள்களும் உள்ளனர். மகன் சுரேஷ்குமார் சென்னையில் சாப்ட்வேர் என்ஜினீயராக வேலை பார்க்கிறார். என்னோடு இணைந்து அவரும் விவசாய பணிகளை கவனித்துக் கொள்கிறார். நான் முழுநேர பணியாக விவசாயத்தை பார்த்துக் கொள்கிறேன். எனது மகன் 10 நாட்களுக்கு ஒருமுறை வந்து விவசாயத்தை கவனிப்பார். இருப்பினும் எங்கள் இருவரின் முயற்சியும் எங்களை இப்போது விவசாயத்தில் நம்பிக்கையான நிலைக்கு கொண்டு வந்து நிலை நிறுத்தி உள்ளது.

<u>வங்கிப் பணியை விட்டுவிட்டு விவசாயத்திற்கு வந்ததற்கான காரணம் என்ன?</u>

பணத்தை மட்டும் பார்த்துக் கொண்டு இருந்தால் பசி ஆறாது. உணவு தான் பசியை போக்கும். சொந்தமான விவசாய நிலம் இருந்தது. நாம் உண்ணும் உணவு நாம் உற்பத்தி செய்ததாக இருக்கும் போது அதன் சுவையே தனி தான். தற்போது பேரீட்சை சாகுபடி செய்த இடத்தில் முன்பு வாழை சாகுபடி செய்து இருந்தோம். பின்னர் கோகோ, மூங்கில் என சாகுபடி செய்து பார்த்தோம். அப்போது அரசின் உதவிகள் எதுவும் எளிதில் கிடைக்கவில்லை. அதன்பிறகு தான் பேரீட்சை சாகுபடியில் ஈடுபட முடிவு செய்தோம்.

<u>பேரீட்சை சாகுபடி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படி உதித்தது?</u>

பேரீட்சை சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆசையை விதைத்து, அதற்கு திசை காட்டியாக இருந்தது எனது மருமகன் சுதாகர் தான். அவரும், எனது மகள் உமாவும் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். பேரீட்சை சாகுபடி செய்யலாம் என்று அவர் விதைத்த ஆலோசனை தான், எனக்குள் பேரீட்சை சாகுபடி செய்வது குறித்த ஆசையை வளர்த்தது. இதற்கான கன்றுகள் வாங்கவும் அவர் உதவியாக இருந்தார். நான் தற்போது பர்ரி வகையை சேர்ந்த திசு வளர்ப்பு பேரீட்சை சாகுபடி செய்துள்ளேன். இந்த பேரீட்சை கன்றுகள் இங்கிலாந்து நாட்டில் உள்ள ஆய்வுக்கூடங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. பின்னர் சவுதிஅரேபியா போன்ற நாடுகளில் பராமரிக்கப்பட்டு பிற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் குஜராத் மாநிலத்திற்கு சவுதிஅரேபியாவில் இருந்து திசு வளர்ப்பு கன்றுகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. நாங்களும் குஜராத்தில் இருந்து வாங்கி வந்து சாகுபடி செய்தோம். 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கன்று ரூ.3,500. இப்போது ஒரு கன்றின் விலை ரூ.4,500–க்கும் மேல் உயர்ந்து உள்ளது. பர்ரி பேரீட்சைக்கு என்ன சிறப்பு?

பேரீட்சையில் டேனின் என்ற வேதிப்பொருள் அதிகம் இருக்கும். இதனால் நாட்டு பேரீட்சை பழங்களை அப்படியே உட்கொள்ள முடிவதில்லை. அத்தகைய பழங்களை தின்றால் தொண்டையில் ஒருவித கரகரப்பு ஏற்படும். ஆனால் திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்பட்டுள்ள பர்ரி வகையை சேர்ந்த பேரீட்சை பழங்களை அப்படியே சாப்பிடலாம். கரகரப்பு இன்றி தித்திப்பு அதிகம் இருக்கும். இதனை நமது பகுதியில் உள்ள மண்ணுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் பயிர் செய்யலாம். அறுவடை செய்த பழத்தை 3 மாதங்கள் வரை இருப்பு வைக்கலாம். குளிர்சாதன பெட்டியில் 1 வருடம் வரை இருப்பு வைக்கலாம். பேரீட்சை சாகுபடியில் நீர்மேலாண்மையை எப்படி கடைபிடிக்கிறீர்கள்? திண்டுக்கல் உள்பட தமிழ்நாட்டில் பிற பகுதிகளில் பேரீட்சை சாகுபடி

செய்துள்ளவர்களுடன் இதன் பராமரிப்பு குறித்து கேட்டு தெரிந்து கொள்வேன். பேரீட்சை பாலை வனத்தில் வளரும் மரம் என்றாலும் அதற்கு தண்ணீர் தேவை உள்ளது. சொட்டுநீர்ப் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். கன்றுகள் நடவு செய்த பின்னர் முதல் ஒரு ஆண்டு காலத்திற்கு வாரத்திற்கு 3 நாட்கள் தண்ணீர் பாய்ச்சினோம். ஒரு நாளைக்கு ஒரு கன்றுக்கு 15 முதல் 20 லிட்டர் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. 1 வருடத்திற்கு பிறகு ஒரு கன்றுக்கு 60 லிட்டர் வீதம் வாரத்திற்கு 3 நாட்கள் தண்ணீர் பாய்ச்சினோம். தற்போது காய்கள் காய்த்து, பழுக்கும் நிலையில் 80 லிட்டர் தண்ணீர் வீதம் வாரத்திற்கு 3 நாட்கள் பாய்ச்சி வருகிறோம். உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளை எப்படி பயன்படுத்துகிறீர்கள்? முழுக்க முழுக்க இயற்கை உரத்தை பயன்படுத்தி தான் சாகுபடி செய்து வருகிறோம். மாட்டுச் சாணம், ஆட்டுக் கொட்டகையில் இருந்து கிடைக்கும் உரம் ஆகியவற்றை தான் பயன்படுத்தி வருகிறோம். கோழிக் கழிவுகளையும் உரமாக பயன்படுத்தி வருகிறோம். ஆனால் இது அதிக வெப்பம் அளிக்கக்கூடியது. எனவே அதனை வாங்கி வந்து தனியாக சில மாதங்கள் கொட்டி வைத்து அதன்பிறகு அதனை கன்றுகளுக்கு அளிப்போம். தென்னையை தாக்கும் கூண் வண்டுகள் பேரீட்சை கன்றுகளையும் தாக்குகிறது. இந்த வண்டுகள் கன்றின் அடிப்பாகத்தை தின்று வேர்களை வெட்டி விடும். ஒரு வண்டு மரத்தில் புகுந்தாலே சில நாட்களில் 30–க்கும் மேற்பட்ட முட்டைகள் இட்டு இனப்பெருக்கம் செய்கிறது. இவற்றை கட்டுப்படுத்தவும் இயற்கையில் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கலாம். கச்சக்குமிட்டி காய், வேப்பம்புண்ணாக்கு, ஊமத்தங்காய் ஆகியவற்றில் சாறு எடுத்து அதனை தெளிப்பான் மூலம் கன்றுகளில் தெளிக்க வேண்டும். அவ்வாறு தெளிப்பதால் கூண் வண்டுகள் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும். பேரீட்சை பூக்களில் காய்கள் பிடிக்க மகரந்த சேர்க்கை எப்படி நிகழ்கிறது? பாலைவனப் பகுதிகளில் அதிக அளவில் பேரீட்சை மரங்கள் இருக்கும். அங்கு பெண் மரங்களுக்கு இணையாக ஆண் மரங்களும் இருக்கும். இதனால் காற்றின் மூலமாகவே மகரந்த சேர்க்கை நடந்து விடும். ஆனால் சில ஏக்கர் பரப்பளவில் நாம் வளர்ப்பதால் மகரந்த சேர்க்கையையும் நாமே மேற்கொள்ள வேண்டியது உள்ளது.

அதுமட்டும் இன்றி ஆண் மரங்கள் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பூக்கும். ஆனால் பெண் மரங்கள் பிப்ரவரி மாதம் இறுதியில் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை பூக்கும். இதனால் இயற்கையாக மகரந்த சேர்க்கை நடைபெறுவதில் சிக்கல் உருவாகிறது. எனவே ஆண் மரம் பூக்கும் போது பாளை வெடித்ததும் அதனை தனியாக வெடித்து எடுத்து, பூக்களில் உள்ள மஞ்சள் நிற மகரந்த தூளை உதிர்த்து கண்ணாடி பாட்டிலில் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை வீட்டுக்குள்

வைத்தால் 3 முதல் 4 மாதங்கள் வரை பாதுகாப்பாக இருக்கும். குளிர்பதன பெட்டியில் வைத்தால் 1 ஆண்டு வரை மகரந்தம் கெட்டுப்போகாமல் இருக்கும். பெண் மரம் பூக்க தொடங்கியதும், பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ள ஆண் மகரந்த தூளை மைதா மாவுடன் கலந்து தூவ வேண்டும். 1 பங்கு மகரந்த தூளுடன் 6 மடங்கு மைதா மாவை கலந்து பாளை வெடிக்கும் நேரத்தில் பூவில் தூவ வேண்டும். பாலை வெடிக்கும் முன்பு பாலையை லேசாக வெட்டி எடுத்தும் அதன் வழியாக இந்த தூளை பூக்களில் நன்கு படும் வகையில் தூவலாம். இவ்வாறு மகரந்த சேர்க்கை செய்யப்படுவதால் பாளையில் உள்ள பூக்கள் உதிராமல் அத்தனையும் காய்கள் பிடிக்கும். பாதுகாப்பும், பராமரிப்பும்...

காய்கள் விளையும் நேரத்தில் பறவைகளால் பாதிப்பு ஏற்படும். எனவே வலை அல்லது பாலிதீன் உறைகளை கொண்டு மூட வேண்டும். பேரீட்சை மரங்களை எல்லோராலும் பராமரிக்க முடியாது. அனுபவம் உள்ளவர்களால் மட்டுமே சிறப்பாக பராமரிக்க முடியும். அதனால் சீலையம்பட்டியில் இருந்து சவுதிஅரேபியாவுக்கு சென்று பேரீட்சை தோட்டத்தில் வேலை பார்த்து வந்த 2 பேரை எங்கள் தோட்டத்தில் பராமரிப்பு பணிக்கு நியமித்து உள்ளோம். முதல் மகசூல் எப்படி இருந்தது? 2012–ம் ஆண்டு 2 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்தோம். மொத்தம் 153 மரங்கள் உள்ளன. 2 ஆண்டுகள் ஆகி உள்ள நிலையில் இது தான் முதல் மகசூல். இதனை ‘கன்னி காப்பு’ என்போம். ஒரு மரத்திற்கு 50 முதல் 65 கிலோ வரை காய்த்து உள்ளது. சுமார் 8½ டன் விளைச்சல் அடைந்து உள்ளது. 1 ஆண்டுக்கு முன்பே பொதுமக்கள் பலர் வந்து பழங்கள் வேண்டும் என்று கேட்டனர். அப்போது விளைச்சல் அடையவில்லை என்பதால் கொடுக்க முடியவில்லை. இப்போது மக்கள் ஆர்வத்துடன் வந்து வாங்கிச் செல்கின்றனர். மொத்த வியாபாரத்தில் கிலோ ரூ.220–க்கும், சில்லறையில் கிலோ ரூ.250–க்கும் விற்பனை செய்கிறோம். முதல் காப்பு என்பதால் விளைச்சல் குறைவாக தான் இருக்கும். அடுத்த முறை மரத்திற்கு 100 முதல் 150 கிலோ வரை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 10 ஆண்டுகள் கடந்த மரத்தில் 250 கிலோ வரை மகசூல் பெற முடியும். பேரீட்சை சாகுபடி செய்ய முன்வருபவர்களுக்கு உங்கள் அனுபவம் கொடுக்கும் அறிவுரை என்ன? நெல், தானியப் பயிர்கள் போன்று குறுகிய காலத்தில் அறுவடை செய்யும் பயிர் இது இல்லை. முதலீடு அதிகம் ஆகும். 2 ஆண்டுகள் கழித்து தான் மகசூல் பெற முடியும். 3 ஆண்டுகள் சென்று விட்டால் அடுத்து ஒவ்வொரு ஆண்டும் மகசூல் அதிகரித்துக் கொண்டே செல்லும். உலக

அளவில் பேரீட்சை இறக்குமதியில் இந்தியா முதலிடம் பிடித்து உள்ளது. ஆனால் இங்கு உற்பத்தி என்பது மிகக்குறைந்த அளவு தான் உள்ளது. உற்பத்தியை பெருக்கினால் இறக்குமதியை குறைத்து விடலாம். இவ்வாறு சுந்தர்ராஜன் தெரிவித்தார். முயற்சி என்கிற நான்கு எழுத்து மனிதனின் செயல்வடிவம் பெறும் போது இயற்கையோடு போராடி விவசாயத்திலும் வெற்றியை பெறலாம் என்பதை உணர்த்துகிறது இந்த தந்தை–மகனின் தளராத முயற்சி. அந்த தளராத முயற்சிக்கு நமது தாராள வாழ்த்துக்களை சொல்லிடுவோம்.

**<u>வத்தலக்குண்டு பகுதியில் முருங்கைக்காய்களில் விரிசல் நோய் விலை குறைவால் விவசாயிகள்கவலை</u>**



வத்தலக்குண்டு பகுதியில் முருங்கைக்காய்களில் விரிசல் நோய் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள்கவலைஅடைந்துள்ளனர்.

முருங்கை சாகுபடி திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே விருவீடு, சந்தையூர், வலையபட்டி, விராலிமாயன்பட்டி, நடகோட்டை உள்பட 50–க்கும் மேற்பட்ட கிராமங்களில் முருங்கை விவசாயம் நடந்து வருகிறது. தற்போது இந்த பகுதிகளில் மழையின்றி வறட்சி நிலவுவதால் ஒரு டன் முருங்கைக்காய் விளைந்த இடத்தில் 100 கிலோ முருங்கைக்காயே விளைகிறது. அவ்வாறு விளைந்த காய்களிலும் விரிசல் நோய் ஏற்படுகிறது. காற்றின் காரணமாக ஏற்படும் இந்த விரிசல் நோயால் முருங்கைக்காய் விவசாயிகள் கவலை அடைந்தனர். விரிசல் இல்லாத காய் ஒரு கிலோ ரூ.25–க்கு வாங்கப்படுகிறது. விரிசல் உள்ள காய் ஒரு கிலோரூ.15–க்கு விற்பனையாகிறது. விரிசல் நோயால் விலை குறைவு

விவசாயிகள் கூலி ஆட்களை வைத்து முருங்கைக்காயை பிடுங்கி வண்டியில் ஏற்றிக் கொண்டு விருவீட்டில் உள்ள மொத்த கடைகளுக்கு செல்கின்றனர். அங்கு முருங்கைக்காய்கள் விரிசல் இல்லாத காய் முதல்தர காய் என்றும் விரிசல் உள்ள காய் இரண்டாம் தர காய் என்றும் பிரிக்கப்படுகிறது. விரிசல் காய் விலை குறைவாக இருப்பதால் விவசாயிகள் கையில் கிடைக்கும் பணமெல்லாம் வண்டி வாடகைக்கும் கூலி தொழிலாளிகளுக்கும் கொடுக்க வேண்டிய கூலிக்குமே சரியாகி போய் விடுகிறது. விவசாயிகள் துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு வெறுங்கையோடு திரும்பும் அவல நிலை நீடிக்கிறது. இந்த நிலையை மாற்றிட, வேளாண்மை துறையினர் விருவீடு பகுதியில் முகாமிட்டு விரிசல் நோய்க்கு தகுந்த மருந்தை வழங்கி அந்த நோயில் இருந்து முருங்கையை காப்பாற்றினால் மட்டுமே விவசாயிகள் லாபம் அடைய முடியும். எனவே வேளாண்மை துறையினர் இந்த நோய் தாக்கத்தை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது பற்றி விவசாயி தர்மர் கூறும் போது, ‘காற்றினால் ஏற்படும் விரிசல் நோயை கட்டுப்படுத்த வேளாண்மை துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கனவே வறட்சியால் நொந்து போன விவசாயிகள் விரிசல் நோயால் நூலாகி போய் விட்டோம். அரசு உரிய நடவடிக்கை எடுத்து எங்களை கரை சேர்க்க வேண்டும்’ என்றார்.

**<u>படித்த இளைஞர்கள் வேளாண்மை சார்ந்த தொழில் தொடங்க வேண்டும் கலெக்டர் சுப்பையன் பேச்சு</u>**



தஞ்சாவூர், படித்த இளைஞர்கள் வேளாண்மை சார்ந்த தொழில் தொடங்க வேண்டும் என்று கலெக்டர் சுப்பையன் பேசினார்.

பயிலரங்கம்

தஞ்சை கந்தசரஸ் மகாலில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் குறித்த ஒரு நாள் பயிலரங்கம் நேற்று நடந்தது. இந்த பயிலரங்கத்தை மாவட்ட கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

மாணவர்கள் படித்து முடித்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து படிக்கும் காலத்தில் கனவு காண்பது வழக்கம். படித்து முடித்த பிறகு தடுமாற்றம் ஏற்படும். படிக்கும் காலத்திலேயே சரியான திட்டமிடல் இல்லாததே இதற்கு காரணம். எனவே கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும்போதே அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து திட்டமிடல் வேண்டும். இதை செய்தால் வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்கலாம். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஆண்டுக்கு 20 ஆயிரம் மாணவர்கள் கல்லூரிகளில் புதுமுக மாணவர்களாக சேருகின்றனர். இதேபோல் ஆண்டுதோறும் 20 ஆயிரம் மாணவர்கள் படித்து முடித்துவிட்டு வெளியே வருகின்றனர். இவர்களில் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் மணணவர்கள் உயர்கல்விக்கு செல்கின்றனர். ஆயிரம் மாணவர்கள் போட்டித்தேர்வு எழுதி வேலைக்கு செல்கின்றனர். 10 ஆயிரம் மாணவர்கள் தொழில்முனைவோராக தயாராகின்றனர். தொழில்முனைவோர் ஆக வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.10 லட்சம் வரை முதலீடு தேவைப்படும். வேளாண்மை சார்ந்த தொழில் இதற்கு உதவுவதற்கு வங்கிகள் தயாராக இருக்கின்றன. ஆனால் கடன் வழங்கும் வங்கிகளுக்கும், தொழில் முனைவோருக்கும் ஒரு இடைவெளி இருக்கிறது. இதை எப்படி குறைக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும். இந்த பயிலரங்கம் இரு தரப்பினருக்கும் பயனுள்ளதாக அமையும். தஞ்சை மாவட்டம் விவசாயத்தை மட்டும் நம்பி உள்ளது. எனவே படித்த இளைஞர்கள் வேளாண்மை சார்ந்த தொழில் தொடங்கினால் நன்றாக இருக்கும். ஆனால் தொழில்முனைவோர் பாதிபேர் வேளாண்மை சார்ந்த தொழில் தொடங்க தயங்குகின்றனர். அதனால் தான் வேலையில்லா திண்டாட்டம் இருக்கிறது. மாவட்ட தொழில் முனைவோர் மையம், வட்டார தொழில் முனைவோர் மையம், கிராம தொழில்முனைவோர் மையம் போன்றவை தொடங்கப்பட்டுள்ளன. அந்தந்த பகுதிகளில் உள்ள தொழில்முனைவோர் மையங்களை வேளாண்மைதுறை சார்ந்தவர்கள் தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

<u>வளர்ச்சி</u>

தொழில் தொடங்க விருப்பம் இருந்தால் உதவி செய்ய வங்கிகளும், மானியம் வழங்க அரசும், பயிற்சிகளை வழங்க கல்லூரி நிறுவனங்களும் தயராக இருக்கின்றன. விருப்பமும், கடினஉழைப்பும் இருந்து நல்லமுறையில் பயன்படுத்தி கொண்டால் நமது மாவட்டத்தில் தொழில்புரட்சி ஏற்படும். ஒவ்வொரு ஆண்டும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வங்கிகள் ரூ.2 ஆயிரத்து 600 கோடி மதிப்பில் கடன்களை வழங்கிறது. மேலும் கூட்டுறவு வங்கிகளும் ஆண்டுக்கு ரூ.170 கோடி வழங்குகிறது. இருப்பினும் வேளாண்மை சார்ந்த நமது மாவட்டத்தில் வளர்ச்சியை கொண்டு வர முடியவில்லை. எனவே புதுமையான ஒரு வளர்ச்சியை கொண்டு வருவதற்கு பல வல்லுநர்கள், அரசுத்துறையினர், வங்கிகள் இணைந்து இந்த பயிலரங்கத்தை ஏற்பாடு செய்துள்ளனர். இதை நல்லமுறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இதில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் வரதராஜன், மண்டல மேலாளர் ராஜாருக்மாங்கதன், பெரியார் தொழில்நுட்ப காப்பக தலைமை செயல் அலுவலர் அருணா, நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சுப்பிரமணியன், மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் ராமலிங்கம் மற்றும் விவசாயம் சார்ந்த அரசுத்துறை உயர் அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.